செ.வெ.எண்:48 நாள்:19.11.2018

## கரூர் மாவட்டம்

## குழந்தைகள் துன்புறுத்தல் தடுத்தல் தினம் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

கரூர் பசுபதீஸ்வரர் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம், சமூகபாதுகாப்புத்துறையின் கீழ் செயல்படும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.11.2018) குழந்தைகள் துன்புறுத்தல் தடுத்தல் தினம் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை தொடங்கி வைத்து உள்ளூர் தபால் (Inland Letter) (மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் முகவரி அச்சிடப்பட்டது) மாணவியர்களுக்கு வழங்கினார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :

குழந்தைகளுக்கு எதிராக வன்கொடுமைகளோ, குழந்தை திருமணமோ, கல்வி இடைநிற்றலோ, பாலியல் ரீதியான துன்புறுத்தலோ இருப்பதை கண்டறிந்தால் ஆசிரியர்கள், மாணவர்கள் தகவலை உள்ளூர் தபாலில் (Inland Letter) எழுதி, **மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், எண்:13, சாமிகாம்ப்ளக்ஸ், ஆர்.டி.ஓ.ஆபிஸ் எதிரில், மாவட்ட ஆட்சியரகம் அருகில், கரூர்**, என்ற முகவரிக்கு தகவல் தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

மேலும் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பெண் கல்வியின் அவசியம் மற்றும் முக்கியத்துவம், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள், இடஒதுக்கீடு விவரம் ஆகியன குறித்து எடுத்துக்கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி சு.கவிதா, காவல் ஆய்வாளர் திரு.செந்தில்குமார், நன்னடத்தை அலுவலர் திருமதி ஆ.தேவகி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.ஜான்சி, மாவட்ட கல்வி அலுவலர் திரு.ச.கனகராஜ், இலவச சட்டப்பணிகள் ஆணைகள் குழு உறுப்பினர் திரு.கே.கே.சொக்கலிங்கம், ஆகியோர் சிறப்புரையாற்றினர். மேலும் மாணவியர்கள் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**